# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

MSSRF
Science for Sustainable Development

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 01/06/2022 | முதல் | 05/06/2022 |
| அறிக்கை எண் : | 043/ 2022 | வெளியீட்டு நாள் : | 31/05/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (27.05.2022 முதல் 30.05.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 05-06-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/05 | 28/05 | 29/05 | 30/05 | தேதி | நாள்-2 01/06 | நாள்-2 02/06 | நாள்-3 03/06 | நாள்-4 04/06 | நாள்-5 05/06 |
| 4.8 | 0.7 | 4.3 | 15.0 | மழை (மி.மீ) | 12 | 8 | 8 | 5 | 8 |
| 38 | 37 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 25 | 24 | 24 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 25 | 25 | 25 |
| 5 | 5 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 62 | 73 | 65 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 64 | 48 | 82 | 68 | | 40 | 40 | 40 | 40 | 40 |
| 5 | 4 | 5 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 8 | 8 | 8 |
| வட மேற்கு | வட கிழக்கு | வடக்கு | தெற்கு | **காற்றின் திசை** | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 1, 2, 3, 5 தேதி மிதமான மழையும், 4 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 1ம் தேதி இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் , இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சி மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கும் படியும், விளை நிலங்களில் மழை நீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**அடுத்து வாரத்திற்கான விரிவாக்கப்பட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (3 - 9 ஜூன் 2022) :**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டிய மழைப் பொழிவு காணப்படும்

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியோ காணப்படும். 18° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

வரும் 01.06.2022 மற்றும் 02.06.2022 ம் தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள் இடி மின்னலில் இருந்து தங்கள் கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு கழுத்தில் கட்டியுள்ள உலோக மணிகளை அகற்றிவிடவும்.

ஆங்காங்கே சிறிதளவு மழை பெறப்பட்டுள்ளதாலும், அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் விவசாயிகள் உழவு செய்தல் மற்றும் நிலம் தயாரித்தல் வேலைகளுக்கு திட்டமிடலாம். மருந்து தெளிக்கும் வேலைகளை சற்றே ஒத்திவைக்கும் படியும் மழைநீரை சேகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : முருங்கை, பருத்தி, கால்நடை.**

**முருங்கை:**

- முருங்கைக்காய் பயிரைத் தாக்கும் இலைப்புழு பரவலாக தென்படுகின்றது.
- புழுக்கள் இலைப் பச்சையத்தை சுரண்டித் திண்பதால் இலைகள் சல்லடை போன்று காணப்படும்.
- இதனைக் கட்டுப்படுத்த மரத்தை சுற்றி உழவுசெய்து மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை வெளிகொணர்ந்து அழிக்க வேண்டும்.
- ஒரு ஹெக்டேருக்கு ஒரு விளக்குப்பொறி வீதம் அமைக்க வேண்டும்.

**பருத்தி:**

- பருத்தியில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது.
- பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் சுருக்கங்களுடன் காணப்படு.
- ஒரு ஏக்கருக்கு 100 மி.லி என்ற அளவில் இமிடாகுளோப்ரிட் பூச்சிக்கொல்லி மருந்தினை தெளிக்கலாம்.

**கால்நடை:**

- நிகழும் தட்பவெப்ப சூழ்நிலையின் காரணமாக ஆடுகளை ஆட்டுகொல்லி நோய் தாக்க வாய்ப்பு உள்ளது.

- இதனை தவிர்க்க எதிர்வரும் ஜூன் மாதத்தில் தங்களது ஆடுகளுக்கு ஆட்டுக்கொல்லி எனப்படும் பிபிஆர் நோய்க்கான தடுப்பூசி மருந்தினை போட்டுக் கொள்ளவும்.